[29th August 1970

Salem Steel Plant

*23. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Chief Minister of Tamil Nadu has requested the Central Government to have the Salem Steel Plant as a joint venture of the State and Central Governments ; and

(*b*) if so, whether the Government of Tamil Nadu have any proposal to invest capital and also share the profit and loss of the project ?

சேலம் உருக்காலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம் உருக்காலை மாநில, மத்திய அரசுகளின் கூட்டு முயற்சியாக இருக்க வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது உண்மையா ?

(இ) இதில் முதலீடு செய்யவும், ஆதாயத்தையும், இழப்பினையும் பங்கிட்டுக் கொள்ளவும், தமிழ் நாடு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) சேலம் உருக்காலை நிர்வாகத்தில் மாநில அரசும் பங்கேற்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்துள்ளது.

(இ) சேலம் உருக்காலை நிறுவுவதற்கென்று ஒரு கம்பெனி அமைக்கப் பெற்ற பின்பு மாநில அரசு முதலீடு செய்வது பற்றி பரிசீலிக்கும்.

*24. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Capital estimate of Salem Steel Plant has to be revised especially regarding Foreign Exchange components due to devaluation ; and

(*b*) if so, what will be the revised estimate and the action taken by the Government in this matter ?

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நாணய மதிப்பு குறைக்கப்பட்டதன் காரணமாக, குறிப்பாக அந்நியச் செலாவணி கூறுகள் தொடர்பாக சேலம் உருக்காலையின் மூலதன மதிப்பீடு திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், திருத்த மதிப்பீடு என்னவாயிருக்கும் ? இது குறித்து அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

* Postponed from the List of Questions for 26th August 1970.

29th August 1970]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கல்கத்தாவைச் சேர்ந்த திருவாளர்கள் தஸ்தூர் கம்பெனியார் 1964-ம் ஆண்டு தயாரித்த விரிவான திட்ட அறிக்கையில், பிற்பாடு ஏற்பட்ட விளைவுகளான நாணய மதிப்புக் குறைப்பு, கச்சாப் பொருள்கள், இயந்திர சாதனங்கள் இவைகளின் விலைகளில் ஏற்பட்ட மாறுதல்கள் மற்றும் உள்நாட்டிலேயே கிடைக்கும் இயந்திரங்கள் முதலிய காரணங்களால், மாற்றங்கள் செய்ய வேண்டி உள்ளது. இந்திய அரசு மேற்படி விரிவான திட்ட அறிக்கையில் நடப்பு விலைகளின் மதிப்பின் பேரில் மாற்றங்கள் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். சேலம் உருக்காலையின் திருத்திய மதிப்பீடு இந்த மறுபரிசீலனை அறிக்கை இந்திய அரசினிடம் கிடைக்கப்பெற்ற பிறகுதான் தெரிய வரும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : சேலம் உருக்காலை சம்பந்தமாகக் கடந்த சில தினங்களாக இரண்டு குறிப்புகள் பத்திரிகையின் வாயிலாகத் தெரிகின்றன. நம்முடைய பிரதமர் அவர்கள் வந்து ஆலையை செப்டம்பர் மாதம் 16-ந்தேதி திறந்து வைக்கிறார்கள் என்பது ஒன்று. மற்றொன்று, அந்த ஆலையின் உற்பத்தி அளவு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்பது. இதற்கு அடிப்படையான காரணங்கள் உண்டா ? அதைப்பற்றி அமைச்சர் விளக்கம் சொல்வாரா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : பிரதம மந்திரி அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் நமது முதலமைச்சரைச் சந்தித்தபோது செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் இந்த வேலையைத் தொடங்கி வைப்பதற்கு வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு உடனடியாக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று எங்களிடத்தில் சொன்னார்கள். மாவட்டக் கலெக்டர் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். உற்பத்தி அளவைப் பொறுத்த வரையில், தஸ்தூர் கம்பெனி இதில் ரூ. 75 கோடிக்குத் திட்டமிட்டபோது, 5 லட்சம் டன் என்று போட்டது. இன்றைக்கு நாம் ஒப்புக்கொண்டிருக்கிற சேலம் உருக்காலை ஸ்பெஷல் ஸ்டீல் என்ற முறையில் தனி உருக்கை உற்பத்தி செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருப்பதால், அந்த ரகம் நம்முடைய நாட்டுக்கு எந்த அளவு தேவை, எந்த அளவு உற்பத்தி செய்ய முடியும் என்று பரிசீலனையில் இருக்கிறது. இதை வைத்துத்தான் 5 லட்சத்தை இரண்டு லட்சமாகக் குறைக்கப்போகிறார்கள் என்று பத்திரிகையில் வந்தது. பிரதம மந்திரியிடத்தில் கேட்டோம். அவர்கள் மத்திய அரசாங்கத்தினர் 5 லட்சத்தை $2\frac{1}{2}$ லட்சமாகக் குறைக்கவில்லை என்றுதான் எங்களிடத்தில் சொன்னார்கள்.

(†) *25. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have requested the Government of India to commence the Salem Steel Plant without waiting for Hospet and Vizag Steel Plants ; and

(*b*) if so, the reply received from the Government of India ?

(†) Postponed from the List of Questions for 26-8-70.